**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**STC.No. 867 /2016**
**U/s. 59(1)FSSAI Act**
**PETITIONER SIDE WITNESS NO. 2(LW.2 )**

| | |
|---|---|
| **Name** : சிவாஜிராவ் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

**1** வது எதிர் மனுதாரர் ஆஜர்**. R2 PADW. 3** வது எதிர் மனுதாரர் ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது **.**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா , நகல் ஆய்வாளர், செல்வி, வி. சௌந்தர்யா, தட்டச்சர்.**

**STC.No. 867/2016 09.09.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.00 PM**

**முதல் விசாரணை:**

நான் தற்போது ே ஹாட்டல் பாண்டியன் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 4.08.2016 ம் தேதி பாரில் உணவு துறையில் இருந்து பரிசோதணைக்காக வந்தார்கள். அங்கு கீழே அடுக்கிவைத்திருந்த 7 Up case யிலிருந்து ஒரு பாட்டில் எடுத்துக்கொண்டார்கள். அதில் பேப்பர் இருந்தது என்று சொன்னார்கள்.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் கையில் வைத்திருந்த Fileல் எழுதி வைத்திருந்தை பார்த்து சாட்சியம் அளித்தேன் என்றால் சம்பவம் நடந்து பல நாட்கள் ஆகி விட்டதால் நினைவில் இல்லை. அதனால் பார்த்து சொன்னேன்.அதில் 7up என்று எழுதி வைத்துள்ளேன் என்றால் சரிதான். 1வது எதிரி நந்தகுமார் என்பவரை எனக்கு கடந்த 16 வருடங்களாக தெரியும். எத்தனை case இருந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை . என்னிடம் 7 up பாட்டிலில் இருந்த பேப்பரை எடுத்து காண்பித்தார்கள்.அந்த பாட்டில்கள் எந்த நிறத்தில் இருந்தது என்றால் பச்சை நிற பாட்டில் இருந்தது . அந்த பாட்டிலை திறந்து பேப்பரை எடுத்தார்களா என்றால் ஆம். ஒரு case ல் 30 பாட்டில்கள் இருக்கும். அது போன்று எத்தனை case இருந்தது என்றால் சுமார் 4 –5 case இருந்துகிறளாம். நான் முதலில் 10–12 case இருந்தது என்று சொன்னேன் என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. அந்த 30 பாட்டில்களில் எவ்வாறு பேப்பர் இருந்த அந்த பாட்டிலை கண்டுபிடித்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த பாட்டிலில் வேண்டுமென்றே பேப்பர் ஏற்கனவே போடப்பட்டு எதிரியை இவ்வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. உணவு பாதுகாப்பு அதிகாரி வந்து சோதனை செய்த பின்னரே நான் சம்பவயிடம் வந்தேன் என்றால் உணவு பாதுகாப்பு அதிகாரி பாரில் சோதனையிட்டார்கள் எங்களை அழைத்தபோது

நாங்கள் வரவேற்பரையில் இருந்து பாருக்கு சென்றோம் . இவ்வழக்கு யார் மேல் போடப்பட்டது என்றால் தெரியாது. 2 வது எதிரி மிகப்பெரிய தொழிலதிபர் என்றாலும் அவர் பெயரை கெடுப்பதற்காக இவ்வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரி துபாயில் தொழில் செய்து வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 2 வது எதிரியை இவ்வழக்கில் வேண்டுமென்றே சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சோதனை முடிந்த பிறகு நான் வரவேற்பரைக்கு சென்றுவிட்டேன் . வரவேற்பரையில் என்னை விசாரிக்கவில்லை. சோதனை நடந்து கொண்டிருந்த சமயத்தில் அங்கு நான் சுமார் 5 நிமிடங்கள் இருந்தேன். உணவு பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்திற்கு என்னை விசாரணைக்கு அழைத்தார்களா என்றால் இல்லை. நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்தேனா என்றால் நினைவில்இல்லை. நான் எந்த ஆவணத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் அவ்வாறு வேறு எந்த ஆவணத்திலும் என் கையெழுத்து இருந்தால் அது என்னுடையது அல்ல என்றால் சரியல்ல .

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

உணவு பாதுகாப்பு அதிகாரி என்னிடம் வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. உணவு பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்திற்கு வர சொல்லி என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. பாரில் 7 up பாட்டில்களை விற்பனைக்காக எங்கு வைத்திருந்ததார்கள் என்றால் விற்பதற்காக வைத்துள்ள பொருள்களை தனியாக ராக்கில் வைத்திருந்தார்கள். விற்பனை இல்லாத பொருள்களை கல்லாவிற்கு அருகில் அடுக்கி வைத்திருப்பார்கள். அவ்வாறு வைத்திருப்பது பார்வைக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் 7 up பாட்டில் அவ்வாறு பார்வைக்கு தெரியாமல் வைத்திருந்தார்கள் என்றால்சரிதான்.

**(3 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**: S.T. **கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.